உயர்கல்வித் (எப்.2) துறை
தலைமைச் செயலகம், சென்னை—9

<u>கடிதம் எண்.15212/எப்.2/2010—4 நாள் 01.11.2010</u>

அனுப்புநர்
திரு.க.கணேசன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
1) கல்லூரிக் கல்வி இயக்குநர்,
சென்னை—6 (இ)

2) பொதுச் செயலாளர்,
பல்கலைக்கழக ஆசிரியர் கழகம், (AUT)
134, இராமா சந்து, நுங்கம்பாக்கம்,
சென்னை—34 (இ)

3) பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம், (TNGCTA)
2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை—5 (இ)

4) பொதுச் செயலாளர்,
மதுரை காமராசர் மனோன்மணீயம் சுந்தரனார்
பல்கலைக்கழக ஆசிரியர் மன்றம் (MUTA)
நெ.6. காக்கா தோப்புதெரு,
மதுரை—1 (இ)

அம்மையீர் / அய்யா,

பொருள்: கோரிக்கைகள் — கல்லூரி ஆசிரியர்கள் கூட்டு நடவடிக்கைக்குழு — சில கோரிக்கைகள் — 11.10.2010 அன்று நடைபெற்ற விவாதம் — கூட்ட நடவடிக்கைக் குறிப்பு — குறித்து.

---

கல்லூரி ஆசிரியர்கள் கூட்டு நடவடிக்கைக் குழுவின் கோரிக்கைகள் குறித்தான விவாதம் 11.10.2010 அன்று காலை 11.00 மணியளவில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் மாளிகை, தலைமைச் செயலகக் கட்டிடத்தில் 5வது மாடியிலுள்ள கூட்ட அரங்கில் முதன்மைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,
சுரேஷ்குமார் 02/11/2010
அரசு முதன்மைச் செயலாளருக்காக.

## உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் அவர்கள், கல்லூரி ஆசிரியர் கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தினை 11.10.210 அன்று நடத்தியபோது எடுக்கப்பட்ட முடிவுகள்

11.10.2010 அன்று காலை 11.00 மணியளவில் தலைமைச் செயலகம், நாமக்கல் மாளிகை 5–வது தளத்தில் உள்ள பொதுப்பணித்துறை மாநாட்டுக் கூடத்தில் கல்லூரி ஆசிரியர்களின் கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டம் உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட சங்கங்களைச் சேர்ந்த மாநிலப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

1. பல்கலைக் கழக ஆசிரியர் கழகம் (AUT)
2. மதுரை காமராசர், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக ஆசிரியர் மன்றம். (MUTA)
3. தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் (TNGCTA)

மேற்கண்ட ஆசிரியர் சங்கங்களின் சார்பில் மொத்தம் 64 கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

| எண். | கோரிக்கை | அரசு முடிவு |
|---|---|---|
| 1 | அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஓய்வு வயதினை உயர்த்துதல் | இது அரசின் கொள்கை முடிவு சம்பந்தப்பட்டதாகும். |
| 2 | கல்லூரி ஆசிரியர்கள் ஓய்வு பெறும் போது கல்வி ஆண்டு இறுதிவரை மறு நியமனம் செய்வதற்கு பதிலாக கல்வி ஆண்டின் இறுதி நாளையே ஓய்வு பெறும் நாளாக அறிவிக்கக் கோருதல். | பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை மற்றும் நிதித்துறையுடன் கலந்து பரிசீலனை செய்யப்படும். |
| 3 | 01.01.96 ஊதிய நிர்ணயத்தில் அசோக்வர்தன் ஷெட்டி செயல்முறைப்படி பணிமேம்பாடு வழங்கி ரூ.14940/– வழங்கப்படல். | பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் |
| 4 | ஆசிரியர்களது பணிப்பளு குறித்து மறு பரிசீலனை செய்து அறிவித்தல். | பணிப்பளு குறித்த விவரங்கள் திரட்டப்பட்டு அதனடிப்படையில் பணிப்பாதுகாப்பு குறித்த முடிவு எடுக்கப்படும். தற்போதுள்ள நிலையில் மாற்றங்கள் ஏற்படுத்தி கல்லூரிக் கல்வி இயக்குநர் சுற்றறிக்கை அனுப்பி இருந்தால் அது நிறுத்தி வைக்கப்படும். |
| 5 | ஓராண்டு இடைவெளி இன்றி புத்தாக்க புத்தொளி பயிற்சிக்கு சென்ற காலம் பணிக்காலமாக கருதப்படல். | நிர்வாகக் காரணத்தால் புத்தொளி மற்றும் புத்தாக்கப் பயிற்சிக்கு அனுப்பப்படாத நேர்வுகளில் ஒறுப்பு செய்வதற்கு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 6 | கல்லூரி ஆசிரியர்கள் தகுதிகாண் பருவக் (Probation) காலத்தினை UGC பரிந்துரைப்படி ஓராண்டாக மாற்றுதல். | தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு உள்ள தகுதிகாண் பருவ காலம்தான் கல்லூரி ஆசிரியர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இது அரசின் கொள்கை முடிவு. |
| 7 | புதிய ஓய்வூதியத் திட்டத்தைத் திரும்பப் பெறக் கோருதல். | அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டது. இது உயர்கல்வித்துறை அளவில் பரிசீலிக்கக்கூடியது அல்ல. |
| 8 | 20 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம் கோருதல். | அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டது. இது உயர்கல்வித்துறை அளவில் பரிசீலிக்கக்கூடியது அல்ல. |
| 9 | மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான அனைத்து சலுகைகளையும், UGC தெரிவித்துள்ளவற்றையும் வழங்கிடல். | அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டது. இது உயர்கல்வித் துறை அளவில் பரிசீலிக்கக்கூடியது அல்ல. |
| 10 | மத்திய அரசு மகளிர் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுபோல் கல்லூரி ஆசிரியைகளுக்கும் ஆறு மாதகால மகப்பேறு விடுப்பு வழங்கிடல். | அரசு கொள்கை முடிவு.<br>அரசு கல்லூரிகளில் Day Care Centre அமைப்பதற்கு நிதி நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும். அரசு உதவி பெறும் கல்லூரிகளில் அந்தந்த நிர்வாகம் இதனை அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசால் கேட்டுக் கொள்ளப்படும். |
| 11 | 2006-க்கு ஊதிய நிலுவைத் தொகை கோருதல். | அரசின் கொள்கை முடிவு. இது உயர்கல்வித் துறை அளவில் பரிசீலிக்கக்கூடியது அல்ல. |
| 12 | மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று (Commutation) தொகையினை 40% ஆக வழங்குதல். | அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டது. இது உயர்கல்வித்துறை அளவில் பரிசீலிக்கக்கூடியது அல்ல. |
| 13 | காரைக்குடி அழகப்பாபல்கலைக் கழகம் மற்றும் அன்னை தெரசா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அரசு பல்கலைக் கழகத்திற்கான அனைத்து அமைப்புகளையும் உருவாக்கிடல். | பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| 14 | பல்கலைக் கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள 100% அரசு செலவில் செயல்பட்டு வருகின்ற உறுப்புக் கல்லூரிகளை திரும்பப் பெற்று முழு அளவிலான அரசு கல்லூரியாக மாற்றுதல். | உறுப்புக் கல்லூரிகளை அரசு கல்லூரிகளாக மாற்ற பரிசீலனை இல்லை. இது அரசின் கொள்கை முடிவு. |
| 15 | அறந்தாங்கி (புதுக்கோட்டை மாவட்டம்) மற்றும் (திருவண்ணாமலை மாவட்டம்) ஆகிய இரு உயர்கல்வியில் பின் தங்கியுள்ள பகுதிகளில் அமைக்கப்படுகின்ற மாதிரிக் கல்லூரிகள் (Model Colleges) 100% அரசு ஏற்று நடத்திடுதல். | இது அரசின் கொள்கை முடிவு. |

| | | |
|---|---|---|
| 16 | ஓராண்டிற்கும் குறைவான F.I.P. பதிலி நியமனக் காலத்தை கணக்கில் எடுக்க ஏதுவாக பணிமுறிவினைக் பொருத்தருளக் கோருதல். | இதனை பரிசீலினை செய்து நடவடிக்கை எடுக்கப்படும். |
| 17 | சுய நிதிக் கல்லூரிகளின் மாணவர் சேர்க்கை உள்ளிட்ட அனைத்தினையும் முறைப்படுத்திட ஆய்வுக் குழுவினை அமைத்திடக் கோருதல். | இதன் செயல்பாடுகள் குறித்து முன்னமே ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதனை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யப்படும் |
| 18 | கல்லூரிக் கல்வி இயக்குநர் / மண்டல இணை இயக்குநர்கள் JAC – யுடன் குறிப்பிட்ட கால இடைவெளியில் முறையான கூட்டங்கள் நடத்தி அவ்வப்போது எழுகின்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காணக் கோருதல். | இணை இயக்குநர் அளவில் 3 மாதத்திற்கு ஒரு முறையும், கல்லூரிக் கல்வி இயக்குநர் அளவில் 6 மாதத்திற்கு ஒரு முறையும் நடத்தப்படும். அரசு கல்லூரிகளைப் பொருத்தவரை கல்லூரிக் கல்வி இயக்குநர் அளவில் 6 மாதத்திற்கு ஒரு முறை நடத்தப்படும். |
| 19 | அரசு கல்லூரிகளில் 16.12.1988 நாளிட்ட 1840 அரசாணை மூலம் பணி நிரந்தரம் செய்யப்பட்ட 611 ஆசிரியர்களின் தற்காலிகப் பணிக்காலத்தினை முன்னோக்கிப் பணி வரன்முறை செய்திடல். | இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது. தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும் |
| 20 | 1.1.1996 ஊதிய நிர்ணயப்படி 1.7.2006 முதல் 30.9.2010 வரையிலான காலத்தில் விரிவுரையாளர் (SS & SG) பணி மேம்பாட்டினை அடைந்திட்டோர்களுக்கு, முந்தைய பணி மேம்பாடு வழங்கி புதிய ஊதியத்தினை நிர்ணயம் செய்தல். | இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| 21 | அரசு கல்லூரி ஆசிரியர்களின் பணிமேம்பாடு நிர்ணயம் செய்வதை அக்கல்லூரி முதல்வர்களுக்கு அளித்திடல். | பரிசீலனை செய்யப்படும். |
| 22 | அரசு கல்லூரிகளில் பணியாற்றும் மூத்தோர் இளையோரைக் காட்டிலும் குறைவான ஊதியம் பெறும் முரண்பாட்டைக் களைதல். | பரிசீலனை செய்யப்படும் |
| 23 | அரசு அறிந்தேற்புடைய த.நா.அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்திற்கு கல்லூரிக் குழுவில் பிரதிநிதித்துவம் தருதல். | இது ஏற்றுக் கொள்ள இயலாத ஒன்று. அரசு கல்லூரி நிர்வாகத்தில் துறைத் தலைவர்கள் அடங்கிய குழு செயல்பட்டு வந்திருக்கிறது. இதில் சங்கப் பிரதிநிதிகளுக்கு இடம் அளிப்பது ஏற்கக் கூடியதாக இல்லை. நிராகரிக்கப்படுகிறது. |
| 24 | ஐந்து ஒரு நாள் வேலை நிறுத்தக் காலங்களை முறைப்படுத்துதல் | மற்ற துறைகளில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும். |
| 25 | அரசு அறிந்தேற்பு பெற்ற சங்கப் பொறுப்பாளர்களுக்கு சிறப்புத் தற்செயல் விடுப்பு அளித்தல். | இது குறித்து அரசு வெளியிட்டுள்ள ஆணைகளின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| 26 | ஓய்வூதியப் பயன்களுக்கு ஒப்பந்தப் பணிக்காலத்தை கணக்கில் கொள்ள வேண்டுதல். | அரசு தற்போது வெளியிட்டிருக்கிற அரசாணை (நிலை) எண்.408, நிதித்துறை, நாள் 25.8.2009–ன் அடிப்படையில், ஒப்பந்தக் காலத்தினை ஓய்வூதியத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| 27 | அரசு கல்லூரியில் முதல்வர் உயர்வு பெறுவோர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்திடும் வரை முந்தைய ஊதியத்தைத் தொடர்ந்து அளித்திடல். | இதுகுறித்து பரிசீலனை செய்யப்படும் |
| 28 | அரசு கல்லூரிகளில் ஆசிரியரல்லாத பிற ஊழியர் பணியிடங்களை புதியதாக உருவாக்கி நியமனம் செய்தல். | நடவடிக்கை எடுக்கப்படும். |
| 29 | அரசு கல்லூரிகளில் சுழற்சி–2 முறையில் துவக்கப்பட்டுள்ள பாடப்பிரிவுகளுக்குத் தேவையான புதிய ஆசிரியர், அலுவலர் பணியிடங்களை உருவாக்குதல், முறையான நியமனம் செய்தல். | இதனை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும். |
| 30 | அரசு கல்லூரிகளில் உள்ள நூலகர், உடற்கல்வி இயக்குநர் பணியிடங்கள் TNPSC-யின் வரையறையில் இருந்து TRB வரையறைக்கு மாற்றுதல். | தற்போது நியமனம் குறித்து TNPSC அறிவிக்கை வெளியிட்டிருக்கிறது. இது முடிந்த பிறகு Teachers Recruitment Board-க்கு மாற்றுவது குறித்து பரிசீலித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும். |
| 30A | பிஎச்.டி ஊக்க ஊதிய உயர்வு காரணமாக கூடுதலாக ஊதிய நிர்ணயம் பெறும் முரண்பாட்டினை சமன் செய்திடல். | பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும். |
| 31 | அரசு கல்லூரிகளில் முதல்வராகப் பதவி உயர்வு பெற கணக்குத் தேர்வு (Account Test) நிபந்தனையினை விலக்கிக் கொள்ளுதல். | இதனை ஏற்றுக் கொள்ள இயலாது. |
| 32 | பிஎச்.டி யுடன் உள்ள ஆசிரியர்கள் அனைவரையும் பணியாற்றும் கல்லூரி நிலை கருதாமல், பிற தகுதிகள் இருப்பின் பிஎச்.டி ஆய்வு வழிகாட்டியாக (Ph.D Guideship) இருந்திட பல்கலைக் கழகங்கள் அனுமதி வழங்கிடச் செய்தல். | இதில் அரசளவில் உத்தரவு பிறப்பிக்க இயலாது. பல்கலைக்கழகங்களே முடிவு செய்யவேண்டும். |
| 33 | பல்கலைக் கழகங்களிடம் ஒப்படைத்துள்ள அரசு உறுப்புக் கல்லூரிகளுக்கு ஆசிரியர்கள், முதல்வர்கள் நியமனம். | இதனை ஏற்றுக் கொள்ள இயலாது. பல்கலைக்கழகங்களின் சட்டதிட்டத்திற்கு உட்பட்டது. |
| 34 | அரசு கல்லூரிகளில் தற்காலிக நிலையில் (Temporary Establishment) உருவாக்கப்பட்டுள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரந்தநிலைப் பணியிடங்களாக (Permanent establishment) மாற்றுதல். | இதுபற்றி பரிசீலிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| 35 | கல்லூரிக் கல்வி இயக்குநரகத்திற்கான கணினியகம் உருவாக்கப்படல் (Computer Centre) | இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். |
| 36 | புதிய கல்லூரிக் கல்வி மண்டல இயக்குநரகங்கள் உருவாக்கல் | இது குறித்து பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும். |
| 37 | மையக் கொள்முதலை நீக்கி கல்லூரிகளே கணினி மற்றும் இதர கணினிப் உதிரி பாகங்கள் வாங்கிடல். | தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கல்லூரிகளே கொள்முதல் செய்வதற்கேற்ப நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| 38 | அரசு கல்லூரிகளில் நீண்ட காலமாக பகுதிநேர ஆசிரியர்களாகப் பணியாற்றுவோர்களை சிறப்பு ஆணை மூலம் பணிவரன்முறைப்படுத்துதல். | இது குறித்து பரிசீலனை செய்யப்படும் |
| 39 | மாநிலக் கல்லூரியில் மாற்றுத் திறனாளிகளுக்கு பயிற்றுவிக்க சிறப்புப் பயிற்சி பெற்றுள்ள ஒப்பந்த ஆசிரியர்கள் இருவரையும் பணிநிரந்தரம் செய்ய வேண்டுதல். | இது ஏற்றுக் கொள்ள இயலாத ஒன்று. தகுந்த, தகுதியானவர்கள் தேர்வு செய்யப்பட்டு அதனடிப்படையில்தான் நியமனம் செய்யப்படுவார்கள். |
| 40 | த.நா. கல்வியியல் பல்கலைக் கழகத்திற்கான ஜனநாயக அமைப்புகளை உருவாக்குதல். | இதனை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும். |
| 41 | ஏழு அரசு கல்வியியல் கல்லூரிகளில் பணியாற்றும் எம்.எட் பட்டத்துடன் உள்ள ஆசிரியர்களின் பணிமூப்புப்பட்டியல் உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையில் அக்கல்லூரிகளுக்கு முதல்வர் நியமனம் செய்தல். | இது குறித்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| 42 | சுழற்சி–2 பாட வகுப்புகள் உள்ள துறைகளின் தலைவர் பொறுப்பு நிர்ணயம் செய்திடல் / மதிப்பூதியம் வழங்கிடல். | இது குறித்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| 43 | ஜூனியர் – சீனியர் ஊதிய முரண்பாட்டைக் களைய உதவி பெறும் கல்லூரியை ஒரே அலகாகக் கருதி ஆணையிடக் கோருதல். | பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| 44 | ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்பிடக் கோருதல். | இது குறித்து பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும். |
| 45 | அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகள் அரசு / கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஒப்புதல் இன்றி பாடப்பிரிவுகளை மூடுவதைத் தடைசெய்திடக் கோருதல். | இது குறித்து கல்லூரிக் கல்வி இயக்குநரால் தனியே சுற்றறிக்கை அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| 46 | அரசு உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்கள் ஓய்வு பெறும் போது பெறும் ஈட்டிய விடுப்பிற்கான தொகை முழுதும் (encashment of earned leave) வருமான வரியிலிருந்து விலக்களித்தல். | பரிசீலனை செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| 47 | அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றி ஓய்வு பெறும் ஆசிரியர் – அலுவலர்களின் ஓய்வூதியப் பயன்கள் ஓய்வு பெற்ற ஆறு மாதத்திற்குள்ளாக வழங்கப்பட வேண்டும். | ஓய்வூதிய பலன் வழங்க கருத்துரு அனுப்ப காலக்கெடு ஒரு வருடமாக உயர்த்தப்பட்டிருக்கிறது |
| 48 | தமிழ்நாடு கல்லூரி ஆசிரியர் கூட்டு நடவடிக்கைக்குழுவின் கருத்தின் அடிப்படையில் தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டத்திருத்தம் செய்ய வேண்டுதல். | இது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. |
| 49 | அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் உள்ளதைப் போலவே அரசு உதவி பெறும் சுயநிதிக் கல்லூரிகளிலும் மாணவர் சேர்க்கைக்கு ஒற்றைச் சாளர முறை பின்பற்றப்பட வேண்டும். | சட்டத்தில் இடமில்லாத நிலையில், இது சாத்தியமற்றது. |
| 50 | அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச பேருந்து பயணச் சலுகை வழங்கக் கோருதல். | இதனை ஏற்க இயலாது. |
| 51 | சுழற்சி–1 மற்றும் 2 உள்ள காலிப் பணியிடங்களுக்கு தற்காலிக முறையில் ஆசிரியர் நியமனம் செய்தல். | தற்காலிக முறையில் நியமிப்பதற்கு பரிசீலனை செய்யப்படும். |
| 52 | கல்லூரிக் கல்வி இயக்குநரகத்திற்கான தனியான கட்டிடத்தினை உருவாக்குதல் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர்களுக்கான வீட்டு வசதிகளை உருவாக்குதல். | இது குறித்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| 53 | நூலகம், உடற்கல்வி மற்றும் அறிவியல் ஆகிய துறைகளில் வாங்கப்பட்ட பொருட்கள் பயன்பாட்டிற்கு தகுதியில்லாமற் போகின்ற நிலையில் அவைகளை பதிவேடுகளில் இருந்து நீக்கிட கல்லூரிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகபட்ச உச்சவரம்பினை உயர்த்துதல். | இது குறித்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 54 | அரசு கல்லூரிகளில் கழிவறை துப்புரவாளர் மற்றும் பெருக்குநர் ஆகிய பணியிடங்களுக்கு (C&D Posts) தினக்கூலி அடிப்படையில் தற்காலிகமாக நியமித்துக் கொள்ள கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கல். | நியமிக்க இயலாது. Out sourcing என்ற முறைதான் நடைமுறையில் உள்ளது. |
| 55 | தன்னாட்சி கல்லூரிகளில் தேர்வு நெறியாளர் (Controller of Examinations) நியமனத்திற்கான நெறிமுறைகளில் உருவாக்குதல் மற்றும் பணியேற்பவர் முழுநேர தேர்வு நெறியாளராக செயல்படல். | இது குறித்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| 56 | கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பேராசிரியர் தகுதி பெற்ற அனைவருக்கும் பணிமேம்பாடு அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். | பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 57 | CIEFL நிறுவனத்தில் PGDTE பட்டம் பெற்றவர்களை M.Phil இணையாகக் கருதி ஒரு ஊக்க ஊதியம் வழங்கக் கோருதல் | University Grants Commission-தான் இதில் முடிவு எடுக்க இயலும். கோரிக்கை ஏற்க இயலாது. |
| 58 | தமிழகத்தில் உள்ள சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகளில் பயிலும் முதல் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டண சலுகை வழங்கக் கோருதல் | அரசின் கொள்கை முடிவு. |
| 59 | ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரியினை அரசுக் கல்லூரியாக அறிவிக்கக் கோருதல். | தனியார் கல்லூரிகள் நெறிப்படுத்தும் சட்டத்தை மீறுகின்ற நிர்வாகங்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். தனித்தனியே கல்லூரிகள் மீது எழுப்பப்பட்டுள்ள பிரச்சனைகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்க இயலாது. |
| 60 | தஞ்சாவூர் கரந்தை T.U.K. கலைக் கல்லூரி விசாரணை அறிக்கையின்மீது நடவடிக்கை எடுக்கக் கோருதல் | |
| 61 | கோவை C.B.M. கல்லூரிக்கு தனி அலுவலர் நியமனம் கோருதல் | |
| 62 | ஈரோடு கலை அறிவியல் கல்லூரிக்கு தனியார் கல்லூரி ஒழுங்காற்றுச் சட்டப்படி தனி அலுவலர் நியமனம் கோருதல் | |
| 63 | சென்னை, மேடவாக்கம், காயிதேமில்லத் கல்லூரியில் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள கணிதவியல் பேராசிரியர் அப்துல் ஹமீதை அரசு தலையிட்டு மீண்டும் பணியமர்த்திட ஆவண செய்யக் கோருதல் | |
| 64 | அரசு உதவி பெறும் கல்லூரிகளில் நடைபெறும் அனைத்து சுயநிதிப் பிரிவுகளையும் அரசு உதவி பெறும் பிரிவுகளாக மாற்றிடக் கோருதல். | இதனை ஏற்க இயலாது. |

க.கணேசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

// உண்மை நகல் //

நா. சுரேஷ் குமார்
2/11/10
பிரிவு அலுவலர்.